முக்கிய வார்த்தைகள்:
*நன்றியுள்ள*
*அருள் / ஆகாரம் வசதி*
*நிம்மதியான*
*மார்க்கம்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**08 ஆகஸ்ட் 2025 / 14 ஸஃபர் ஹிஜிரி 1447**

**வளமான நிலமும் மன்னிக்கும் இறைவனும்**

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي جَعَلَ فِي ٱلْإِيمَانِ رَاحَةً لِلْقُلُوبِ، وَفِي ذِكْرِ ٱللَّهِ فَرَجًا مِنَ ٱلْكُرُوبِ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَىٰ فِي ٱلتَّنْزِيلِ: يَا أَيُّهَا ٱلَّذِينَ آمَنُوا ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொண்டு, எப்போதும் அவனை நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களி லிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். நமது உள்ளங்களில் நன்றியுணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்! அல்லாஹ் நமக்கு அருள் புரிவானாக! அவனது அருட்கொடைகளை நமக்கு அதிகமாக வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

பின்வரும் கேள்வியைக் கவனத்தில் கொள்ளுங்கள்! நாம் அமைதியாகவும் முன்னேற்றமான நிலையிலும் வாழும் முஸ்லிம்கள் எனும் ரீதியில், சிறந்த முஸ்லிம்களாக ஆகுவதற்கு நாம் அனுபவித்து வரும் வசதிகளையும் இலகுவான நிலையையும் புறக்கணிப்பது அவசியமா?

இக்கேள்விக்குப் பதிலளிக்க, முற்காலத்தில் வாழ்ந்த "ஸபா" எனும் கூட்டத்தார்களின் வரலாற்றில் நாம் சிந்தனை செய்வது அவசியமாகும். அல்லாஹ் அந்த வரலாற்றை திருக்குர்ஆனின் "ஸபா" எனும் அத்தியாயத்தின் 15-வது வசனத்தில் பின்வருமாறு கூறுகிறான்:

لَقَدْ كَانَ لِسَبَإٍ فِي مَسْكَنِهِمْ ءَايَةٌ ۖ جَنَّتَانِ عَن يَمِينٍ وَشِمَالٍ ۖ
كُلُوا۟ مِن رِّزْقِ رَبِّكُمْ وَٱشْكُرُوا۟ لَهُۥ ۚ بَلْدَةٌ طَيِّبَةٌ وَرَبٌّ غَفُورٌ ﴿١٥﴾

பொருள்: நிச்சயமாக, ஸபா நகர மக்களுக்கு அவர்கள் வசித்திருந்த இடங்களில் ஓர் அத்தாட்சி இருந்தது. அதன் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் இரண்டு சோலைகள் இருந்தன; " உங்கள் இறைவன் அளித்துள்ள ஆகாரத்திலிருந்து புசியுங்கள்; அவனுக்கு நன்றியும் செலுத்தி வாருங்கள். [உங்கள் நிலம்] வளமான நிலமாகும்; இன்னும் [உங்கள் இறைவனாகிய அவன்] மன்னிப்பளிக்கும் இறைவன் ஆவான்" [என்று அவர்களுக்குக் கூறப்பட்டது]

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, ஸபா நகர மக்களுக்கு பலவித அருட்கொடைகளையும், அமைதியையும், வளமான நிலத்தையும் வழங்கினான்; அந்த நிலத்தைச் சுற்றித் தோட்டங்கள் இருந்தன; அவை நிரப்பமான வாழ்வாதாரத்தையும் உற்பத்திப் பொருட்களையும் அவர்களுக்கு வழங்கின. அவர்கள் மிகவும் சுகமாக வாழ்ந்தார்கள்; பல வசதிகளை அனுபவித்தார்கள். அவ்வாறு அவர்கள் மிகவும் சுகமாகவும் அபரிவிதமான

வசதிகளுடனும் வாழ்ந்து வந்த நிலையில், ஒரே ஒரு விஷயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென அல்லாஹ் அவர்களுக்குக் கட்டளையிட்டான்; அதனை அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருந்தான்; அதுதான், எப்போதும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதாகும்.

எனினும், அந்த ஸபா நகர மக்களின் விதி என்னவாக இருந்தது என்பதை மேற்கண்ட வசனத்தை அடுத்த வசனங்கள் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது. அல்லாஹ்வுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்ற அல்லாஹ்வின் கட்டளையை எவ்வாறு அவர்கள் புறக்கணித்தார்கள் என்பதும் அந்த வசனங்களில் விளக்கப்படுகிறது. அதன் காரணமாக, அவர்கள் அனுபவித்து வந்த சுகமான வாழ்க்கை பேராபத்தாக அவர்களுக்கு மாறியது. அவர்களின் வளமான பூமி வறண்ட பூமியாகவும், செழிப்பான நிலை கஷ்டமான நிலையாகவும், ஏராளமான செல்வ வளங்களுடன் நிறைந்த அவர்களின் வாழ்க்கை துன்பம் மிக்கதாகவும் மாறி விட்டது.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

ஸபா நகர மக்களைப் போன்ற, கடந்த கால சமுதாயங்களின் வரலாறுகள் பல பாடங்களை நமக்குப் போதிக்கின்றன. நாம் ஒன்று, அப்பாடங்களைக் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்; அல்லது அவர்கள் செய்த அதே தவறுகளை நாமும் செய்து பல ஆபத்துக்களை எதிர் கொள்ள வேண்டியதிருக்கும்.

அமைதி மற்றும் நலத்துடன் கூடிய வளமான வாழ்க்கையை வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் எனும் ரீதியில், ஸபா நகர மக்களின் வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் என்ன என்பதை இங்கு நாம் தெரிந்து கொள்ள இருக்கின்றோம்:

**முதலாவது பாடம்: நமது உலக சம்பந்தமான முன்னேற்றமும் மார்க்க சம்பந்தமானப் பொறுப்புணர்வும் சமநிலையில் இருக்க வேண்டும்.**

ஸபா நகர மக்களின் வரலாறானது, பொருளாதார வெற்றியும் சுகமும் நமது மார்க்கக் கடமைகளிலிருந்து நம்மைத் தூரமாக்காது என நமக்குத் தெளிவாக நினைவூட்டுகின்றது.

அதே சமயம், நமது மார்க்கத்தைப் பற்றிப் பிடிப்பதற்கு உலக முன்னேற்றத்தைக் கைவிட வேண்டுமென இஸ்லாம் நமக்குப் போதிக்கவில்லை. உதாரணமாக, ஸபா நகர மக்களின் வரலாற்றை எடுத்துக் கொள்வோம்; ஸபா நகர மக்கள் அனுபவித்து வந்த வளமான வாழ்க்கையைப் புறக்கணிக்க வேண்டுமென அல்லாஹ் அவர்களுக்குக் கட்டளையிடவில்லை. மாறாக, அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளை நல்ல விஷயத்துக்காகப் பயன்படுத்த வேண்டுமென்றும், அல்லாஹ்வுக்குத் தொடர்ந்து அடிபணிந்து நடக்க வேண்டுமென்றும், அருட்கொடைகளை வழங்கிய அல்லாஹ்வை ஒருபோதும் மறக்கக் கூடாதென்றும் அவர்கள் கட்டளையிடப்பட்டார்கள்.

அவ்வாறே, இன்று நாம் அனுபவித்து வரும் வாழ்வாதாரங்களை, நல்ல வழிகளில் பயன்படுத்தப்படும் வகையில் பொறுப்புடன் நிர்வகிப்பது அவசியமாகும்.

**இரண்டாவது பாடம்: நாம் அனுபவித்து வரும் அருட்கொடைகளைப் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும்.**

அல்லாஹ் வழங்கியுள்ள அருட்கொடைகளின் அருமையை உண்மையாக உணர்வது தான், நன்றி செலுத்துதல் ஆகும். அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகளைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொருவரும் தொடர்ந்து கடினமாக உழைக்க வேண்டும்.

ஸபா நகர மக்களின் அதே தவறுகளை நாமும் செய்வது கூடாது; அம்மக்கள் அல்லாஹ்வின் அருள்களைப் புறக்கணித்ததன் விளைவாக, அவர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து வளங்களும் நலன்களும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன. ஒரு நன்றியுள்ள முஸ்லிம் அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ள அருள்களையும் நல்ல விஷயங்களையும் பாதுகாப்பவராக இருப்பார்; தனக்காக மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலனுக்காகவும் வருங்கால சந்ததிகளுக் காகவும் பாதுகாப்பவராக இருப்பார்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

நமது தொடர்படியான, பரஸ்பர முயற்சிகளின் மூலம் அல்லாஹ் வழங்கியுள்ள ஒவ்வொரு அருட்கொடைக்கும் நன்றி செலுத்த வேண்டுமென நமக்கு நாம் நினைவூட்டிக் கொள்வோமாக! இந்த விழிப்புணர்வானது, மேற்கண்ட திருக்குர்ஆன் வசனத்தில் கூறப்பட்டுள்ள பின்வரும் சிறந்த கருத்தின் பால் நமக்கு வழிகாட்டட்டுமாக:

بَلۡدَةٞ طَيِّبَةٞ وَرَبٌّ غَفُورٞ

பொருள்: ”வளமான நிலம்; மன்னிக்கும் இறைவன்”

ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.